**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.52/2024**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | புஷ்பவள்ளி (PW1) | | |
| Husband's Name | ரவி வெங்கடேஷ் | தொழில் | |
| Village | மண்ணரை | | |
| Taluk | அவிநாசி | Age | **60** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of June 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். தற்போது சென்னையில் உள்ள எனது மகளின் வீட்டில் இருந்து வருகிறேன். எனது மகன் தனமோகன் திருப்பூரில் செல்போன் கடை வைத்து நடத்தி வந்தார். தேதி நினைவில்லை. கடந்த 2023ம் வருடம் ஒரு நாள் எனது மகளின் செல்போனிற்கு ரவிந்தீரன் என்பவர் போன் செய்து பூண்டி செல்லும் ரோட்டில் எனது மகன் இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தபோது எதிரே வேகமாக வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக தகவல் சொன்னார். நானும் என் மகளும் எனது மகனை திருப்பூர் அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தபோது எனது மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக லாரி டிரைவரின் மீது நடவடிக்கை எடுக்க பெருமாநல்லூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் சவக்கிடங்கில் வைத்து விசாரணை செய்தபோது நான் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். வாகன விபத்து இழப்பீடு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |